

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) தலைமைச் செயலகத்தில், திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்கள் ஏ.ரியா, ஆர்.அனுஸ்ரீ, நாடக கலைஞர் மற்றும் எழுத்தாளர் ஏ.ரேவதி, வழக்கறிஞர் ஆர்.கண்மணி மற்றும் திருநங்கையர்கள் கே.ஆராதனா, ஏ.நிவேதா, எஸ்.கிரித்திகா, டி.கார்க்கி, என்.ஜென்சி, சாரிகா, கௌதமி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை மூன்றாம் பாலினத்தவர்க்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், ஊர்க்காவல் படையில் மூன்றாம் பாலினத்தவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜ்குமார் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### மக்களவை தொகுதி மறுவரையறை விவகாரத்தில்

# மாநிலங்களுடன் ஆலோசிக்காமல் ஒன்றிய அரசு முடிவு எடுக்கக் கூடாது!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிக்கை!

திருவனந்தபுரம், மார்ச் 16-

மக்களவை தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அனைத்து மாநிலங்களுடனும் ஆலோசனை நடத்திய பின்னரே ஒன்றிய அரசு முடிவெடுக்க வேண்டும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு :-

ஒரு மாநிலத்தின் தற்போதைய விகிதாச்சார இடங்களை குறைக்காமல் மக்களவை தொகுதிகளை மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்திய மாநிலங்களுக்கு இதில் பாதிப்பு ஏற்படக்கூடாது. சுதந்திரத்துக்குப் பிறகு



ஒன்றிய அரசு கொண்டு வந்த மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகளால் மக்கள் தொகையைக் குறைத்த மாநிலங்களுக்கு நாடாளுமன்றத்தில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை குறைப்பது நியாயமற்றது. இதில் தவறிய மாநிலங்களுக்கு இது வெகுமதி அளிப்பது போல அமையும்.

விகிதாச்சார அடிப்படையில் தென் மாநிலங்களுக்கு கூடுதல் தொகுதிகள் கிடைக்கும் என்ற ஒன்றிய அரசின் வாதத்தை நம்ப முடியாது. இந்த விகிதமானது தற்போதைய நாடாளுமன்ற இடங்களின் சதவீதத்தின் அடிப்படையிலா, அல்லது மக்கள்தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையிலானதா என்பதையும் ஒன்றிய அரசால் தெளிவுபடுத்த முடியவில்லை. இந்த இரண்டு வழிகளிலும் தென்னிந்திய மாநிலங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கும். தன்னிச்சையான செயல்களைத் தவிர்த்து, ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சியின் சாரத்தைக் காப்பது ஒன்றிய அரசின் பொறுப்பாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சென்னை, தீவுத்திடலில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பத் துறையின் சார்பில் நேற்று (15.03.2025) நடைபெற்ற நுகர்வோர் விழிப்புணர்வு குறித்து மாணவர் மாணவியருக்கான மராத்தான் ஓட்டத்தினை கொடியசைத்து துவக்கி வைத்து. வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், மாணவர்கள், மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்தநாள்! எல்.வைரவமூர்த்தி ஏற்பாட்டில்

# சைதை மேற்குப் பகுதி இலக்கிய அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 16-

சைதை மேற்குப் பகுதி இலக்கிய அணி சார்பில் எல்.வைரவமூர்த்தி ஏற்பாட்டில் கழக தலைவர் தமிழக முதல்வர் 72வது பிறந்த நாளை முன்னிட்டு கற்பக விநாயா மருத்துவ கல்லூரி நடத்தும் மாபெரும் மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

சைதை மேற்கு பகுதி இலக்கிய அணி சார்பில் பகுதி அமைப்பாளர் எல்.வைரவமூர்த்தி ஏற்பாட்டில் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (16.03.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் பழைய மாம்பலம் ரோடு, கிருஷ்ணப்பநாயக்கன் தெரு சந்திப்பில், கற்பக விநாயகா மருத்துவ கல்லூரி நடத்தும் மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவ முகாமினை தொடக்கி வைக்கிறார்.

மேலும் இந்நிகழ்விற்கு பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி துணை செயலாளர் த.சம்பத், வட்ட செயலாளர் ந.தமிழரசு, மாவட்ட பிரதிநிதி ஆர்.ரவி, இலக்கிய அணி நிர்வாகிகள் எம்.பார்த்திபன், எம்.எஸ்.மணி, ஏ.எஸ்.பழனி, டி.எஸ்.ரவிச்சந்திரன், மாவுமில் ஸ்ரீதர், ஆகியோர் முன்னிலையிலும், பகுதி நிர்வாகிகள் சேட்ராஜா, இரா.சுரேஷ், இ.வ.ரகுபதி, எஸ்.பிரபு, எம்.பெருமாள், ஆர்.அருண், கே.பாரி, எஸ்.பழனி, எம்.ரவி, ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இந்நிகழ்விற்கு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்பாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் சைதை.மா.அன்பரசன், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், கவிதாகௌதமன், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன்,

அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், ஜி.பாபு, டி.என்.சிவமணி, பொன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பால்கார்ரவி, 140, 140 அ வட்டகழக நிர்வாகிகள் வி.மனோகரன், ஆர்.ஜெகநாதன், தென்றல் தினேஷ், கே.கௌரி, எஸ்.பஷீர், எஸ்.சரவணன், பா.கமல்சங்கர், கே.துளசி, பிரஸ் விஜி, த.ஜெயராமன், ம.சுகுமார், வழக்கறிஞர் பாபு, எம்.சுரேஷ்குமார், க.பிரஸ்மணி, லால்மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், எம்.அய்யாவு, ஆர்.பன்னீர், கே.ஞானம், இ.பாண்டுரங்கன், பகுதி இளைஞர் அணி நிர்வாகி கள் ஜிம் க.பிரபு, க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன்,

அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் பி.ஆர்.துரைராஜ், ஆர்.எஸ்.டி.சிற்றரசு, ஜி.ஜே.மோசஸ், சார்புசரவணன், எஸ்.விவேக்செல்வம், ஆர்.எஸ்.ரமேஷ், கேபிள்மணி, ஆர்.ஜி.கற்பகம், ஆட்டோ ஜான், எஸ்.மல்லிகா, வழக்கறிஞர் மாரியப்பன், ஆர்.தனசேகரன், இரா.பாபு, பிடிசி.குமார், பூ.பாஸ்கர், சி.நிர்மல்குமார் உள்ளிட்ட கழக முன்னோடிகள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

### அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில்

# நுகர்வோர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்! 1500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 16-

சென்னையில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து மராத்தான் ஓட்டம் நடைபெற்றது.

தேசிய நுகர்வோர் நாள் மற்றும் உலக நுகர்வோர் உரிமை நாளினைக் கொண்டாடிடும் பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலமாக தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மராத்தான் ஓட்டம் நேற்று (15.03.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது. இம்மராத்தான் ஓட்டத்தில் 1500க்கும் மேற்பட்ட பள்ளி/கல்லூரி, மாணவ/மாணவியர்கள் பங்கேற்றனர்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்ற இம்மராத்தான் போட்டியினை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சென்னை தீவுத்திடலிலிருந்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஐந்து கிலோ மீட்டர் தூரம் கொண்ட இம்மராத்தான் போட்டி தீவுத்திடலில் ஆரம்பித்து அண்ணா சாலை, சிவானந்தா சாலை வழியாகச் சென்று திரும்பவும் தீவுத்திடலுக்கு வந்து நிறைவு பெற்றது.

இம்மராத்தான் ஓட்டத்தில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ/மாணவியருக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் உயர் அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### பட்ஜெட் இலச்சினையில் ரூ. என்று மாற்றிய

# தமிழக முதல்வரின் புரட்சிகரமான முடிவுக்கு பாராட்டு!

## கன்னட அமைப்பு தலைவர் கடிதம்!

பெங்களூரு, மார்ச் 16-

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கர்நாடக ரக்ஷணா வேதிகே தலைவர் டி.ஏ.நாராயணகவுடா எழுதியுள்ள கடிதத்தில், ‘தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஒரு நாள் முன்பாக இந்திய அரசு கடந்த 16 ஆண்டுகளாக பயன்படுத்தி வரும் தேவநாகிரி குறியீட்டை கைவிட்டு, அதற்கு பதிலாக தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் ரூ. என்ற எழுத்தை பயன்படுத்தும் உறுதியான தீர்மானம் எடுத்துள்ளீர்கள். ஒரு பெருமைக்குரிய இந்திய குடிமகனாகவும் கன்னடனாகவும் உங்களின் நடவடிக்கையை இதயபூர்வமாக வரவேற்கிறேன். உங்களின் உறுதியான செயல்பாட்டை பாராட்டுகிறேன்.

உங்களின் செயல்பாட்டிற்கு எவ்வளவு எதிர்ப்பு வரட்டும், மிரட்டல்கள் வந்தாலும் வடமாநிலத்தின் இந்தித் திணிப்புக்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் உங்களின் உறுதி நிச்சயம் பாராட்ட வேண்டியதாகும். மொழி அடிப்படையில் தென்மாநிலங்களை நிரந்தர அடிமைகளாக மாற்ற வடமாநில இந்தி விசுவாசிகள் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள்.

அதை எதிர்த்து தமிழ்நாட்டில் திராவிட போராட்டம் நடத்தி வருவது தென்மாநில திராவிட மொழியினருக்கு பெருமையாக உள்ளது. மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகிய உணர்வுடன் மாநிலங்கள் இணைந்து காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### இறுதி ஆண்டு முடித்து – நிலுவைப் பாடங்கள் வைத்துள்ள

# பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, மார்ச் 16-

பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டு முடித்தும் பல்வேறு காரணங்களால் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு உள்ளது என உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கூறினார்.

பாலிடெக்னிக் கல்லூரி இறுதி ஆண்டு முடித்து நிலுவைப் பாடங்கள் (Arrears) வைத்துள்ள மாணவர்கள் எதிர்வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவ தேர்வுகளின் போது, தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்கப்படுவதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார தேவையை அறிந்து அரசின் அனைத்து துறைகளின் சார்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களின் எதிர்கால நலன் கருதி, மாண வர்களின் மீது தனி அக்கறை கொண்டு உயர்கல்வித் துறையில் பல்வேறு நல திட்டங்களை அறிமுகப்படுத்தி மாணவர்களின் கல்வி தரத்தை செம்மைப்படுத்தி வருகிறது. ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயின்று, தகுந்த வேலை வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் தொழிற்சாற் கல்வியினை வழங்கி வருகிறது.

பாலிடெக்னிக் கல்லூரி பயின்று பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் தேர்ச்சி பெறாமல் நிலுவை வைத்துள்ள பாடங்களுக்கு (Arrears) தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு வழங்கும் படி மாணவர்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து உத்தரவிட்டதின் படி, பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டு முடித்தும் பல்வேறு காரணங்களால் சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் தங்களின் வாழ்வில் அடுத்த நிலைக்கு செல்ல இயலாத சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவர்களும் வாழ்வில் முன்னேற்றம் பெற ஏதுவாக அரசு எதிர்வரும் ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025 பருவத் தேர்வுகளின் போது, நிலுவைப் பாடங்கள் (Arrears) தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்க முடிவெடுத்துள்ளது.

இது குறித்த விவரங்களை https://dte.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் அறிந்து கொள்ளலாம். இச்சிறப்பு வாய்ப்பினை சில பாடங்களில் தேர்ச்சி பெறாத பாலிடெக்னிக் மாணவர்கள் பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கி கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.